**CC.03/2022** **Dt: 19.06.2023**

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.3862/2023 Dt–09.06.2023 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.2 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of June 2023.

19.06.2023

அ.சா.3 – காளீஸ்வரி

(1, 3 முதல் 5 எதிரிகள் ஆஜர் 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ).

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**குறிப்பு:** சாட்சி 26.05.2023ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) நான் பரமக்குடியில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சம்பவ சமயத்தில் பரமக்குடியில் தான் இருந்தேன் என்றால் இல்லை நான் திருவிழாவிற்கு சாமி கும்பிட வந்திருந்தேன். நான் போலிசார் விசாரணையிலும் திருவிழாவிற்கு வந்ததாகதான் கூறினேன் என்றால் சரிதான். அ.சா.1 எனது மாமியாரை இராமாநதபுரம் அரசு மருத்துவனைக்கு அழைத்துச்சென்றோம். நானும் உடன் சென்றேன்.

2) இராமநாதபுரம் அரசு மருத்துவனையில் அ.சா.1 3நாட்கள் சிகிச்சையில் இருந்தார்கள். அங்கு வைத்துதான் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரிதான். சம்பவத்தின்போது யார் யாரை தாக்கினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 எனது மாமியார் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**CC.03/2022** **Dt: 19.06.2023**

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.3862/2023 Dt–09.06.2023 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.2 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of June 2023.

19.06.2023

அ.சா.2 –ராஜேஸ்வரி

(1, 3 முதல் 5 எதிரிகள் ஆஜர் 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ).

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

**குறிப்பு:** சாட்சி 26.05.2023ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) எனது முதல் விசாரணையில் கூறிய விவரங்களை தான் போலிசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் கீழகன்னிச்சேரியில் தான் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது அம்மாவின் சொத்துக்களை நான் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்பட்ட தேதியில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான், நான் பக்கத்து தெருவில்தான் வசித்து வருகிறேன்.

2) அ.சா.1 எனது தாயார் என்பதாலும் அவர்களைது சொத்துக்களை நான் அனுபவித்து வருவதாலும் அ.சா.1க்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான், ஆனால் எதிரிகள் வீட்டில் இருந்து வெளியில் வருவதை நான் பார்த்தேன்.

எதிரி தரப்பில் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் மனு செய்து அந்த மனு Cr.M.P.No.3862/2023 Dt–09.06.2023 ம் தேதி அனுமதிக்கப்பட்டு அ.சா.1 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 19th day of June 2023.

<u>19.06.2023</u>

<u>அ.சா.1–</u>முனியம்மாள்

(1, 3 முதல் 5 எதிரிகள் ஆஜர் 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச. பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது ).

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**<u>குறிப்பு:</u>** சாட்சி 22.02.2023 மற்றும் 26.05.2023ம் தேதி முதல்விசாரணையில் கூறிய சங்கதிகள் நினைவூட்டலுக்கு பின்பு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

1) அசா.2 ராஜேஸ்வரி எனது மகள் ஆவார். எனது சொத்துக்களை அசா.2 தான் பராமரித்து வருகிறார். நான் காயம் பட்டவுடன் எந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் நான் இருந்தபோது புகார் வாக்குமூலம் வாங்கினார் என்றால் சரிதான். போலிசார் விசாரித்த தேதி எனக்கு ஞாபகமில்லை.

2) என் வயோதிகம் காரணமாக நானே தவறி கீழே விழுந்து காயம் ஏற்பட்டதை வைத்துக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு வெளிப்புற காயங்கள் ஏதும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.3 காளீஸ்வரி அவரது கணவருடன் பரமக்குடியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். சம்பவத்தன்று அ.சா.3 எங்கு இருந்தார் என்றால் பரமக்குடியில் தான் இருந்தார் சம்பவயிடத்தில் அ.சா.3 இல்லை என்றால் சரிதான்.

3) அ.சா.2 ராஜேஸ்வரிக்கு என்னை அடித்த விவரம் தெரியாது என்றால் சரிதான். அ.சா.2ன் தூண்டுதலின் படி நான் தவறி விழுந்த காயத்தை வைத்துக்கொண்டு

எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.